# உன்னுடன் பேச ஆசை ...



-சுரேஷ்

Copyright © 2018, M. Suresh
All rights reserved.

No part of this publication may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopy, recording or any information storage and retrieval system now known or to be invented, without permission in writing from the publisher, except by a reviewer who wishes to quote brief passages in connection with a review written for inclusion in a magazine, newspaper or broadcast.

Published in India by Prowess Publishing
YRK Towers, Thadikara Swamy Koil St, Alandur, Chennai, Tamil Nadu 600016

ISBN-10: 1-5457-4310-X
ISBN-13: 978-1-5457-4310-2

Library of Congress Cataloging in Publication

# பொருளடக்கம்

நன்றி vii
முன்னுரை ix

1. என்ன பேச 1
2. என் ஞாபகம் 4
3. என் கற்பனை உலகம் 7
4. உன்னுடன் நான்... 10
5. ஏற்க்க மனம் இல்லையோ 13
6. உனக்காக வாழும் நான் 16

Unundan Pesa Aasai Interior.indd 5 27/11/18 1:55 PM

# 1. என்ன பேச

நீங்கள் எங்கு இருந்தாலும் உங்கள் சிரிப்பில்
நான் வாழ ஆசைப்படுகிறேன்.

நான் உங்களை விட்டு தூரமாக இருந்தாலும்
உங்கள் இன்பம் துன்பம் எனக்கு தெரியும்.

மற்றவர்களுக்கு ஒன்று செய்யும் போது ஏதோ செய்வோம்
என செய்கிறேன். உங்களுக்கு செய்யும்போது அதில் அன்பு
பாசம் கலந்து இனம்புரியாத ஓர் உணர்வுடன் செய்கிறேன்.

உங்களுடன் பேச, பேச மனதில் இருக்கும்
இன்னல்கள் குறைந்து இருக்கிறது.

நான் கவலைகளை மறந்து சிறகுகள் விரித்து பறக்க
உன்னுடன் பேச வேண்டும். அது எல்லா காலங்களும்
தொடர வேண்டும் என நினைக்கிறேன்.

நீ சிரிப்பாய் கொஞ்சம் நான் வாழ கன்னக்குழி மௌனமாக
உதடுகள் மொழியாக இருக்கண்களோ புது அர்த்தமாக.

எனக்கு சில சில சந்தோஷங்கள் உண்டு
அதை உன்னுடன் பகிர விரும்புகிறேன்.

ஓர் காலத்தில் எனக்கென எல்லாம் இருந்தது ஆனால் இப்போது
என் நம்பிக்கை மட்டுமே இருக்கிறது. இந்த நம்பிக்கையின் பலம்
நான் உன்னுடன் பேசும் போது அடைகிறேன்.



Unundan Pesa Aasai Interior.indd 1 27/11/18 1:55 PM

எங்கு நீ என்னை தவறாய் புரிந்து கொள்வாயோ என்ற பயமும் ஓர் பக்கம் இருக்க மறு பக்கம் உன்னுடன் பேசாமல் இருக்க முடியவில்லை.

எனக்கு தெரியும் நான் அழகானவன் இல்லை என்று இருந்தாலும் நான் மனதால் அழகானவன் என்று நினைக்கிறேன்.

உன் மீது கோவம் கொள்கிறேன் என் அன்பை புரிந்துகொண்டும் அன்பு இல்லாதது போல ஏன் என்னிடம் நடந்து கொள்கிறாய்.

ஆசையாய் இருக்கு உன்னுடன் பேச. நீ என்னை வெறுக்கின்ற காரணம் என்ன என்று தெரியவில்லை உன் கோவத்தில் நான் வருந்துகிறேன்.

நான் உன்னை பார்க்கும் போது இந்த உலகத்தில் ஏதோ ஒன்று சாதிக்க வேண்டும் என தோன்றுகிறது.

இவை எல்லாம் உன்னுடன் பேச வேண்டியவை. “நீயும் நானும் கோவிலுக்கு போக வேண்டும் உங்களிடம் பேசும் எண்ணம் அதை ஏதோ ஒன்று தடுக்க, என்ன என்று புரியவில்லை எனக்கு நானே ஆறுதல் கொள்ளுகிறேன் எனக்கு ஒருவர் மீது அதிக அன்பு வைத்திருந்தால் நேரில் பார்க்கும் பொழுது பேச வார்த்தைகள் வரவில்லை ஏன் என்றால் பேசும் போது ஏதேனும் ஓர் வார்த்தை தவறாய் பேசிவிடுவொமோ என தோன்றுகிறது.

இதயம் கூட வலிக்கிறதே உன் மௌனத்தில் கொஞ்சம் பேச நான் உயிர் வாழ” என்று உன்னிடம் பேச ஆசை.

உன் பெயர் சொல்லி அழைக்க ஆர்வம்கொண்டேன் உன் தோழனாய் கொஞ்சம் அனுமதி தருவாயா.



Unundan Pesa Aasai Interior.indd 2 27/11/18 1:55 PM

உன்னுடன் பேச நான் அலைபேசியை எடுத்து உன் எண்ணுக்கு அழைப்பேன் ஆனால் பேசலாமா, இல்லை வேண்டாமா என்று என் மனம் தவிக்கும் தருணம் மிக கொடுமையாக இருக்கும்.

உங்களுடன் நிறைய பேச வேண்டும் என்று எனக்கு ஆசை ஆனால் உங்களிடம் பேச வார்த்தை தடுமாறியது ஏன் என்று தெரியவில்லை!..

சில நிமிடம் உன்னை மறக்க நினைக்கின்றேன் ஏதோ ஒன்று புரியவில்லை உன்னை மறந்தால் என்னை நானே இழப்பது போல தோன்றியது எதனால் இந்த மாயம் ஏன் இப்படி என்று தெரியவில்லை ஒரு சமயம் என் நெருங்கிய நண்பரிடம் இதை பற்றி கேட்டேன் அவர் இது காதல் என்றார். ஆனால் நான் இது காதல் இல்லை என்றேன்.

எத்தனை முறை நான் உன்னை பார்த்தாலும் மீண்டும் மீண்டும் உன்னையே பார்க்க தூண்டும் உன்னை விட்டு விழகிச்செல்ல விரும்பினாலும் என்னை விட்டு போகாதே என்று நீ சொல்லுவது போல் இருக்கும் வாய் பேசா குழந்தையாக ஆகிறேன்.

உன் பார்வையின் அர்த்தம் எனக்கு தெரியவில்லை நீ கொஞ்சம் எனக்கு சொல்லுவாயா உன் பதிலுக்கு நான் ஆவளுடன் காத்திருக்கிறேன்.

வாழும் வாழ்கையை வாழும் முறையை நான் உன்னிடம் கற்றேன் சொந்தம் கொள்ளாமல் நம் வாழ்க்கை ஓர் அர்த்தம் ஆனது. காதலர் உலகத்தில் நம் வாழ்க்கையை பாடமாய் பிறர் கற்பார்கள்.

தாய் என்றால் அன்பு தந்தை என்றால் துணிவு சகோதரர் என்றால் தெளிவு தங்கை என்றால் குணம் நட்பு என்றால் நம்பிக்கை

இவை எல்லாம் சேர்த்த ஓர் உறவாக நான் இருப்பேன் “உனக்காக”.



Unundan Pesa Aasai Interior.indd 3 27/11/18 1:55 PM

**You’ve Just Finished your Free Sample**

**Enjoyed the preview?**

**Buy: https://store.prowesspub.com**